## தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகம்

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே 30 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 29 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதி நிலமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மன்னார் மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு நான் தெரியப்படுத்தியிருந்தேன்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மாவட்ட செயலகத்தின் முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

மன்னார் மாவட்டச் செயலகத்திற்குரிய முற்பணக் கணக்கு மீதிகளை கணக்காய்வு செய்த போது கீழ்குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பல்வேறு காரணங்களிற்காகவும் ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பதவியினர் கடன் தொகை ரூபா 459,531 தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவைக்கு அமைய பதவியினர் கடன்களை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | அறவிடுவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

**(ஆ) வைப்புக் கணக்கு மீதிகள்**

நிதிகூற்றுக்களுக்குரிய வைப்புக்கள் கொடுப்பனவு மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போ்து கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 98 வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,908,054 ஆனது இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்களாக உள்ள போதும் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்திற்கமைய தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

**(இ) எல்லைகளை மீறுதல்**

மாவட்டச் செயலகத்திற்குரிய எல்லைகளை மீறுதல் தொடர்பான கணக்காய்வு செய்த போது கீழ் குறிப்பிட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மன்னார் மாவட்ட செயலகத்தினால் 265 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு செயற்பாட்டுக்குரிய ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 11,000,000 பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த பெறுவனவுகளின் அளவு ரூபா 10,932,117 ஆக இருந்தமையால் ரூபா 67,883 ஆன ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை அடையப்படவில்லை. | மதிப்பீட்டுக்கமைய எல்லைகள் மீறாது இருப்பதனை உறுதிப்படுத்துவதுடன் உரிய அனுமதி பெறப்பட வேண்டும். | உரிய அனுமதி பெறப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

மன்னார் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு,

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மாவட்டச் செயலகத்தின் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது இலங்கை சோசலிச சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணம் 452 இன் பிரகாரம் ஐயவினாப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 452(1) பிரகாரம் முறையாக பேண நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | உரிய முறையில் பதிவு செய்து நாளதுவரையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

## 2. நிதி முகாமைத்துவம்

### 2.1 செலவின முகாமைத்துவம்

மன்னார் மாவட்டச் செயலகத்தின் செலவின முகாமைத்துவம் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் 07 மூலதன நிதி ஏற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 67,800,000 ஆக காணப்பட்டதுடன் இவற்றில் ரூபா 44,528,474 பெறுமதியானது சேமிப்பாக காணப்படுகின்றது. மொத்த ஏற்பாடுகளில் 65 சதவீதமாக காணப்பட்டிருந்தது.விபரம் வருமாறு, | வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | எதிர்காலத்தில் பாதீடு தயாரிக்கும் போது சேமிப்புக்களை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| செலவு விடயம் | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டில் வீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 265-1-1-0-2001 | 800,000 | 6,160,197 | 1,839,803 | 23% |
| 265-1-1-0-2002 | 650,000 | 305,054 | 344,946 | 54% |
| 265-1-1-0-2003 | 2,700,000 | 930,050 | 1,769,950 | 66% |
| 265-1-1-0-2102 | 5,350,000 | 3,128,957 | 2,221,043 | 42% |
| 265-1-1-0-2103 | 1,500,000 | 828,830 | 671,170 | 45% |
| 265-1-1-0-2104 | 55,500,000 | 18,195,408 | 37,304,592 | 67% |
| 265-1-1-0-2401 | 1,300,000 | 923,035 | 376,965 | 29% |
| **மொத்தம்** | **67,800,000** | **30,471,531** | **44,528,474** | |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (ஆ) செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா 13,500,000 உரிய செலவின விடயத்திற்காக பயன்படுத்தப்படாமல் வகைமாற்றத்தின் ஊடாக 23 சதவீதம் 04 வேறு செலவின விடயத்திற்கு ரூபா 3,105,000 மாற்றப்பட்டிருந்தமையானது பாதீட்டினை வினைத்திறனான முறையில் தயாரிக்காமையை வெளிப்படுத்துகின்றது. விபரம் வருமாறு, | வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | எதிர்காலத்தில் பாதீடு தயாரக்கும் போது சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டு தயாரிக்க உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

| செலவு விடயம் | ஒதுக்கீடு | வகை மாற்றம் | வீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| 265-1-1-0-1202 | 6,250,000 | 1,359,000 | 22% |
| 265-1-1-0-1203 | 1,375,000 | 412,500 | 30% |
| 265-1-1-0-1401 | 1,725,000 | 680,000 | 39% |
| 265-1-1-0-1402 | 3,300,000 | 377,000 | 11% |
| 265-1-1-0-1506 | 850,000 | 276,500 | 33% |
| | 13,500,000 | 3,105,000 | 23% |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 04 செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா 38,050,000 உரிய செலவின விடயத்திற்கு போதியதாக காணப்படாமையினால் 08 சதவீதத்திற்கு மேற்பட்ட 05 செலவீன விடயங்கள் ரூபா 3,095,300 பெறுமதி வகைமாற்றத்தின் ஊடாக பெறப்பட்டிருந்தன. விபரம் வருமாறு, | வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | எதிர்காலத்தில் பாதீடு தயாரக்கும் போது சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டு தயாரிக்க உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

| செலவு விடயம் | ஒதுக்கீடு | வகை மாற்றம் | வீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| 265-1-1-0-1003 | 33,100,000 | 2,000,000 | 6% |
| 265-1-1-0-1101 | 3,200,000 | 389,500 | 12% |
| 265-1-1-0-1302 | 1,700,000 | 180,800 | 11% |
| 265-1-1-0-1404 | 50,000 | 525,000 | 11% |
| | 38,050,000 | 3,095,300 | 8% |

## 2.2 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

மன்னார் மாவட்டச் செயலகத்திற்குரிய வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல் தொடர்பான தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட குறைபாடு கீழே காட்டப்பட்டுள்ளது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை வரையப்பட்ட 49 காசோலைகள் ரூபா 1,371,155 இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் சரியான தன்மையைத் தேடிக்கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்படாத கொடுப்பனவு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காலக்கிரமத்தில் பதில் வழங்கப்படும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------

### 3.1 செயலாற்றல்

------------------

#### 3.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

----------------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகத்தினால் நல்லெண்ணை உற்பத்திக்கான இயந்திரங்கள் தொடர்பாக 2018.12.12 பெறுகைத்தீர்மானத்திற்கமைவாக CML Engineering Export GMPT நிறுவனத்திற்கு ரூபா 4,978,350 க்கு கொள்வனவு செய்வதற்காக வரையப்பட்ட இரண்டு காசோலைகளும் 2019.08.20 ஆந் திகதிய NNP/MN/A/DS/2019/06 இலக்க கணக்காய்வு ஐயவினாவின் பின்னர் குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும்; மீளாய்வாண்டின் இறுதி வரை நல்லெண்ணை உற்பத்திக்கான இயந்திரத்தை பாவனையிலீடுபடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இயந்திரத்தினை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இவ் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | 2019 ம் ஆண்டில் மீள்குடியேற்றம், புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி, மற்றும் இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிதி உதவியில் மாவட்ட செயலகத்தினால் மடு பிரதேசத்தினுள் பழச்சாறு உற்பத்தி செய்யும் நோக்குடன் ரூபா. 15,946,525 பெறுமதியில் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மடு கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 31.12.2019 வரை இவ் இயந்திரங்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படவில்லை. | இயந்திரத்தினை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இவ் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் 2019 ஆம் ஆண்டு கம்பெரலிய திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சென் தோமஸ் விளையாட்டுக்கழக மைதான புனரமைத்தல் வேலைக்காக ரூபா 484,772.50 இற்கு 02.05.2019 இல் மேற்கொள்ளப்பட்ட | ஒப்பந்தத்திற்கமைய வேலைகள் உரிய காலத்தினுள் நிறைவேற்றப்படல் வேண்டும் | அறவிட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தத்திற்காக எந்தவொரு வேலையும் மேற்கொள்ளப்படாமல் ரூபா 96,955 முற்பணமாக செலுத்தப்பட்டமை ஓர் மேலதிக கொடுப்பனவாகும். மேலும் அவ் இடத் தெரிவில் உள்ள குறைபாட்டின் காரணமாக புனரமைப்பு மேற்கொள்ளப்படாமல் மிகுதி ரூபா 388,040 தொகைக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. | | |
| (ஈ) | மன்னார் பிரதேச செயலகத்தினால் கம்பரலிய கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒப்பந்த வேலைகளுக்கான அமைவிடத்தினை துப்பரவு செய்வதற்கான வேலை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இல்லாத போதும் ரூபா 58,500 செலுத்தப்பட்டுள்ளமை ஒரு மேலதிக கொடுப்பனவாகும். | மேலதிக கொடுப்பனவினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 17 வேலைத்திட்டங்களில் 10 வேலைக்கான மேலதிக கொடுப்பனவு அறவிடப்பட்டுள்ளது.ஏனையவை பிடிகாசு விடுவிக்கும் போது சீராக்கப்படும். |

## 3.1.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொதுநோக்கு மண்டப வேலைக்காக ரூபா 495,000 செலுத்தப்பட்டிருந்த போதும் வேலை பூரணப்படுத்தப்படாமையால் இக் கட்டிடத்தினை பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளமை ஓர் வீண்விரயமான செலவினமாகும். | உரிய காலத்தில் வேலை பூரணப்படுத்தி அதனை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் வேலை நிறைவு செய்யப்படும் |

### 3.1.3 செயற்றிட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் 2018 இல் நீண்ட காலம் இடம்பெயர்ந்த சிங்கள முஸ்லீம் மக்களுக்கான உட்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா. 2,000,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த வேலையானது 2018.12.20 இல் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதும் பயன்படுத்தப்படாமல் உள்ளதுடன் முன்பள்ளிக் கட்டடத்திற்கான காணிகளினது உரிமை மாற்றம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. | கட்டிடத்தினை பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | தற்போது முன்பள்ளி இயங்கி வருவதுடன் இக்காணியினை வலயக்கல்வி பணிப்பாளருக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | மன்னார் மாவட்ட செயலகத்தினால் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழான கொறலிமோட்டை வீதி அமைத்தல் (ஆத்திக்குழி நானாட்டான்) தொடர்பில் ரூபா 10 மில்லியன் மதிப்பீட்டில் நிர்மானதாரரினால் மேற்கொள்ளப்படவேண்டிய வேலையானது 23.11.2019 இல் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தும் 09.01.2020 வரை பூரணப்படுத்தப்படாமல் உள்ளது. | உரிய காலத்தில் வேலைகளை முடிப்பதற்கு ஒப்பந்தத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | தொடர் நடவடிக்கைக்காக உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் 2019 ஆம் ஆண்டு நிதி | பெறுகை வழிகாட்டி மற்றும் கேள்வி அழைப்பிற்கு (Invitation for bid) அமைய செயற்பட | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைக்கு அமையவே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. |

ஒதுக்கீட்டின் மூலம் மன்னார் மாவட்ட வேண்டும் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட Construction of 252 Toilets for the pilgrims at Madhu church premises Toilet set 3 வேலைக்கான பெறுகைக்குழு தீர்மானத்தில் நிர்மானதாரர் குறைந்த பெறுமதியில் கேள்வி மனுவை சமர்ப்பித்திருந்த போதும் ஏற்கெனவே Construction of 252 Toilets for the pilgrims at Madhu church premises Toilet set Set - 2 வேலைக்காக தெரிவு செய்யப்பட்ட நிர்மானதாரர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டதுடன் தீர்மானத்திற்கான காரணமாக போதியளவு அனுபவமின்மை எனக்குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் கேள்வி மனுவிற்கான அறிவித்தலில் (Invitation for bids) பந்தி 09 இல் "One contractor Strictly liable to be awarded only one set" எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் ரூபா. 22,382,300 பெறுமதியான இரண்டு வேலைகள் ஓரே நிர்மானதாரருக்கு வழங்கப்பட்டமை முரணானதாகும். விபரம் வருமாறு,

| Type of work | Amount Rs. |
|---|---|
| Toilet set No - 02 | 11,287,900 |
| Toilet set No - 03 | 11,094,400 |
| **Total** | **22,382,300** |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மூன்று பிரதேச செயலகங்களின் எல்லைக்குட்பட்டு 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியினுள் அரச நிதியில் கட்டப்பட்ட ரூபா. 151,600,000 பெறுமதியான 208 வீடுகள் பாவனையிலீடுபடுத்தப்படாததுடன் வீட்டு உரிமையாளர்களினால் பராமரிக்கப்படாமையினாலும் மற்றும் பொருத்தமற்ற இடத்தெரிவுகளினாலும் இவை 5 வருடங்களுக்கு மேலாக பழுதடைந்து காணப்படுகின்றன. | வீட்டுத்திட்டம் வழங்கல் தொடர்பில் முன்கூட்டிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் மேலும் இவை பயன்படுத்தாமைக்கான உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது பல்வேறுபட்ட தனிப்பட்ட காரணங்களினால் உரிய இடங்களில் வசிக்கவில்லை |

## 4. மனிதவளமுகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மன்னார் மாவட்ட செயலகத்திற்குறிய 209 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய வேலைகள் பாதிப்படைந்திருந்தன.விபரம் வருமாறு, | உரிய காலத்தினுள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | உரிய திணைக்களங்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. |

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | பற்றாக்குறை |
| --- | --- | --- | --- |
| சிரேஸ்ட மட்டம் | 34 | 21 | 13 |
| இடைநிலை மட்டம் | 19 | 5 | 14 |
| இரண்டாம் நிலைமட்டம் | 543 | 389 | 159 |
| ஆரம்ப மட்டம் | 68 | 44 | 23 |
| **மொத்தம்** | **664** | **459** | **209** |